மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'Therefore வேண்டியதில்லை. முன்னுரை வேண்டியதில்லை. முன்னுரைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? கேள்வி நேரத்திலே குற்றம் சாட்டக் கூடாது.

திரு. டி. மார்டின் : குற்றம் சாட்டவில்லை. **Sir,** I will put the question in English.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆங்கிலத்தில் பேசினால் மட்டும் என்ன?

THIRU T. MARTIN : Sir, on account of want of accommodation in the City of Madras, even though our Government servants own bungalows in Madras, they are now unfortunatelyliving in the bungalows coming under the jurisdiction of the Accommodation Controller. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப்பகுதியை நான் அனுமதிக்கவில்லை மூலக் கேள்வியை யொட்டி துணைக் கேள்வி ஏதாவது போட வேண்டுமென்றால், போடுங்கள்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, taking into consideration the scarcity of houses in the City of Madras will the Government construct houses for allotment. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு நிறுத்துங்கள். அந்தப் பகுதிவரைக்கும் ஆன்சர் பண்ணுங்கள்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பிரிஃபேப்ரிகேட் வீடுகளைப்பற்றிக் கேள்வி கேட்டார்கள். இது மூலக் கேள்வியை விட்டு எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். பிரிஃபேபிரிகேடட் வீடுகள் கட்டுவது சம்பந்தமாக ரஷ்ய அரசாங்கத்தின் துணைகொண்டு பரிந்துரை செய்யப்பட்டு ஹவுசிங் போர்டு சேர்மன் அவர்கள் கூட கையெழுத்திட்டுவிட்டார்கள். ஆனால் அதைக் கட்டினால் லாபம் கிடைக்காது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

It was found that the capital cost of the plant including import duty and handling charges, site, building, etc. woul come to Rs. 400 lakhs, an annual expenditure including concrete, steel, salaries, transport etc. costing Rs. 125 lakhs, besides the cost of doors, windows etc. which would come to about Rs. 2½ crores more and an amount to the tune of about Rs. 4 crores for the maintenance of the plant. Therefore, it has been deferred for the present.

புலியூர் சிமெண்ட் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள்.

*30 வின.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

புலியூர் சிமெண்ட் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்காக நிரந்தர மருத்துவ வசதி செய்யப்பட்டுள்ளதா?

1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே புலியூர் சிமெண்ட் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்காக நிரந்தர மருத்துவ வசதி செய்யப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்திர பாண்டியன் : தலைவர் அவர்களே, கடந்த மாதம்கூட அந்தத் தொழிலாளத் தோழர்கள் என்னை அணுகி அவர்களுக்கு நிரந்தரமான மருத்துவ வசதி இல்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நிரந்தர மருத்துவ வசதி அளிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அந்த நிரந்தர மருத்துவ மனையை ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் ஒருவர் பரிபாலித்து வருகிறார் என்று அந்த அதிகாரிகளே தெரிவித்து வருகிறார்கள். ஒருவேளை அவர்கள் இ.எஸ்.ஐ. திட்டத்தை விஸ்திரிக்க வேண்டுமென்று விரும்பினால் அரசாங்கம் முயற்சி செய்யும். தற்போது 1,000 பேர்கள் உள்ள இடங்களில் ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவ நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அதை 750 பேர்களாக மாற்றுவதற்காக நாங்கள் இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். ஆகவே, படிப்படியாக இந்தத் திட்டத்தை புலியூருக்கும் விஸ்தரிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விசைத்தறி தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி.

*84 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்கு "குறைந்தபட்ச கூலி" நிர்ணயம் செய்ய குழு ஏதேனும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அக்குழு செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், சோமனூர், பள்ளிப்பாளையம், ஈரோடு, சௌரிபாளையம் இந்த இடங்களிலே ஏராளமான விசைத் தறிகள் இருக்கின்றன. அங்கே வேலை செய்கின்ற தொழிலாளிகள் ரூபாய் 3,3¼ கூலி பெறுகிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்சம் கூலி கொடுப்பதற்கு ஒரு குழு அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?